## IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.453/2019

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 12th day of July 2023.

| | |
|---|---|
| Name : பிரபாகரன் | Caste: |
| Father's Name: சுப்பிரமணியன் | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

**<u>12-07-2023</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் சிவில் என்ஜினியராக வேலை செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். அவ்வாறு வருமான வரி தாக்கல் செய்வது சம்மந்தமான ரிட்டன்ஸ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 2017-2018 ம் வருடத்திய வருமான வரி ரிட்டன்ஸில் பிரதிவாதிக்கு கொடுத்த கடனை பற்றி நான் கூறவில்லை. 12.11.2017 ம் தேதி மாலை 4.00 மணியளவில் பிரதிவாதிகள் கடன் வாங்கினார்கள். வா.த.சா.ஆ-A1 கடன் ஒப்பந்த பத்திரத்தை அதே தேதியில் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்தார்கள். முன்னரே பிரதிவாதிகள் அந்த கடன் ஒப்பந்த பத்திரத்தை எழுதி வந்தார்கள். பணம் பெற்றுக் கொண்டு அவர்கள் எழுதி வந்த கடன் ஒப்பந்தத்தை கொடுத்தார்கள். அந்த ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்கள் அவர்களே தான் தயாரித்து வந்தார்கள். பிரதிவாதிகள் கடன்

பெற்ற சமயத்தில் வாதி, பிரதிவாதிகள், கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் இருந்தார்கள். கடன் ஒப்பந்த பத்திரத்தில் கிருஷ்ணமூர்த்தியும், அவரது நண்பர் கதிர்வேல் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். அதில் கிருஷ்ணமூர்த்தி எனக்கு தெரிந்தவர். அவர் பிரதிவாதிகளின் உறவினர். என்ன உறவுமுறை என்று தெரியாது. பிரதிவாதிகளை கடன் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இருந்து தெரியும். அதற்கு முன்னர் அவர்களை தெரியாது. பிரதிவாதிக்கு காலில் அடிப்பட்டதாலும், வீட்டு வேலை செய்ததாலும் கடன் கேட்டார். பிரதிவாதி எவ்வளவு சதுரடியில் வீடு கட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது. வீட்டு வேலை எந்த அளவு நடந்து கொண்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் வீட்டிற்கு சென்று நான் பார்க்கவில்லை. திருப்பத்தூரில் வீடு இருப்பதாக சொன்னார்கள். ரொக்கமாக பணம் கொடுத்தேன். டினாமினேசன் எவ்வாறு கொடுத்தேன் என்று நினைவில்லை. கடன் ஒப்பந்தப்படி ஒரு வருடத்திற்குள் கடனை திருப்பி தருவதாக காலக்கெடு போடப்பட்டது. அதன் பிறகு போன் மூலம் பணத்தை திருப்பி கேட்டேன். ஒரு மாதம், இரண்டு மாதம் என்று காலம் கடத்தி வந்தார்கள். வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகளை தொடர்பு கொள்ளவில்லை. பிரதிவாதிகளுக்கு நான் கடன் ஏதும் தரவில்லை என்றும், சாட்சி கிருஷ்ணமூர்த்தியின் தூண்டுதலின் பேரில் பிரதிவாதிகள் மீது பொய் வழக்கு போட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியின் மகள் பெயர் தெரியாது. அவருடைய மருமகன் யார் என்று தெரியாது. கிருஷ்ணமூர்த்தியின் மருமகன் நரேஷ்பாபு என்பவர் இறந்துவிட்டார் என்றும், மருமகனின் தகப்பனாரிடமிருந்து அவருடைய சொத்தை

அபகரிக்க வேண்டி நரேஷ்பாபுவின் சகோதரியான 2ம் பிரதிவாதி மீதும் சேர்த்து இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை கிருஷ்ணமூர்த்தி எனக்கு அறிமுகப்படுத்தினார் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது என்றும், 2ம் பிரதிவாதி அவருடைய சகோதரர் நரேஷ்பாபுவிடம் கையெழுத்து மட்டும் கொடுத்து வைத்திருந்த வெற்று ஆவணங்களை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.